சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 07.02.2026
வா.சா.2 –ரவி S/o.வீரணன்
O.S. No.238/2014
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் ஸ்பிக் யூரியா நிறுவனத்தில் திருவள்ளூரில் வேலை செய்து வருகிறேன். மலைச்சாமி இவ்வழக்கின் பிரதிவாதியை தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. மச்சான் ஞானபிரகாசம் மூலமாக தெரியும். பிரதிவாதியும் நானும் அடுத்தடுத்த ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை யார் கூறினார்கள் என்றால் ஞானபிரகாசம் எனது மைத்துனர் கூறி நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சென்னையில் பணம் கொடுக்கல், வாங்கல் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வாதியின் சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் சகோதரியை வாதி ஞானபிரகாசம் திருமணம் முடித்துள்ளார். சுமார் 15-16 வருடங்களுக்கு முன்பாக பாரத வங்கியில், 5 லட்சம் ரூபாயை ஞானபிரகாசத்தின் ரூபாயை நான் வைத்திருந்தேன்,அதை பிரதிவாதி மலைச்சாமிக்கு அனுப்பும்படி வாதி ஞானபிரகாசம் என்னிடம் தெரிவித்தார். அதன்படி பாரதவங்கி, திருவள்ளூர் கிளையில் பணத்தை மலைச்சாமியின் வங்கிகணக்கிற்கு மாற்றினேன். மலைச்சாமி, மேலூர் பாரதவங்கியில் கணக்கு வைத்திருநதார். அந்த கணக்கிற்கு பணத்தை மாற்றினேன். மேற்படி தொகை மாற்றியது கிரைய ஒப்பந்தம போடப்பட்ட தேதி அன்றே மாற்றப்பட்டதா என்றால் அது தெரியாது. கிரைய ஒப்பந்தம் எந்த தேதியில் போடப்பட்டது அதை அனுசரித்து பணம் மாற்றினேனா என்றால் அதுபற்றி

தெரியாது. 5 லட்சம் ரூபாயானது மலைச்சாமியின் வங்கிகணக்கிற்கே மாற்றிவிட்டேன். பிரதிவாதி மேற்படி 5 லட்சம் ரூபாயை என்னிடம் கடனாக கேட்டு, நான் அதற்காக கொடுத்த காசு என்றும்,அது வாதியின் காசு அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி வங்கிகணக்கிற்கு 2,50,000ரூபாய் மட்டுமே 18.10.2010ம் ஆண்டு பிரதிவாதி வங்கிகணக்கில் செலுத்தியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 2 முறை 2,50,000ரூபாயை மொத்தம் 5 லட்சம் ரூபாயை மாற்றியிருக்கிறேன். ஒரே ஆண்டில் 2 முறை 2,50000 ரூபாயை பிரதிவாதி வங்கிகணக்கிற்கு செலுத்தியுள்ளேன். என்ன காரணத்திற்காக எனது மைத்துனர் வாதியின் வங்கிகணக்கிற்கு செலுத்தாமல் பிரதிவாதியின் வங்கிகணக்கிற்கு செலூத்தினேன் என்றால் வாதியின் அறிவுறுத்தலின் பேரில் பிரதிவாதியின் வங்கிகணக்கிற்கு பணம் செலுத்தினேன். பிரதிவாதிக்க வட்டிக்கு கொடுத்து வாங்கியதால் அவருடைய வங்கிகணக்குக்கு பணம் செலுத்தினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பாரதவங்கி, மேலூர் கிளை வரவு செலவு கணக்கை பார்வையிட்டால் அவர் 2 முறை 2,50000ரூபாய் செலுத்தியது தெரியவரும் என்றால் அவர் மற்றொரு வங்கிகணக்குக்கு கூட அனுப்பியிருக்கலாம். எந்த வங்கிகணக்கிற்கு மற்றொரு 2,50000ரூபாயை அனுப்பினேன் என்றால் ஒரே வங்கிகணக்கிற்கு தான், ஒரே நாளில் தான் அனுப்பினேன் என்று சாட்சி குறிப்பிடுகிறார். மலைச்சாமி உடன்பிறந்த சகோதரரான கைலம்பட்டியை சேர்ந்த பழனி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். அவர்களுடன் சமாதானபேச்சுவார்த்தையில் ஈடுபட்டு 7 லட்சம் ரூபாய் என்று சமரசம் செய்ய ஒப்புகொண்டேன் என்றால் சரியல்ல. அசல் கிரைய ஆவணத்தை ஒப்புகொண்டதன் பேரில் அதை பெற்றுகொள்ளலாம் என்று பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. 7 லட்சம் ரூபாயை பேசி முடித்த பிறகு பதிவு அலுவலகத்தில் பத்திரம் முடிக்க சென்றபோத நான் பிரதிவாதியின் அசல் பத்திரத்தை கொடுக்க மறுத்ததால் பதிவு

நின்றுவிட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வட்டிக்கு தான் கடன் வாங்கியிருந்தார் என்றும் ஆனால் நான் அதை மறைத்து எனது மைத்துனர் மூலமாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அசலும் வட்டியும் சேர்த்து 3,40,000 ரூபாய் கடனுக்காக செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. வாதியும் நானும் சேர்ந்து கொண்டு சொத்தை அபகரிக்கப்பதற்காகவாதி மூலமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எனதுமைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA
Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.02.07 20:14:49 +0530

Sub Judge

Melur